# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 08, 2024

Weekly E-paper ● June 08, 2024




## “அன்று புலி, இன்று எலி!”

சுப.வீரபாண்டியன்





## ராமரும் கை கொடுக்கவில்லையே!

மதிவாணன்

## ஞாயிறு போற்றுதும்!

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 08, 2024 Weekly E-paper ● June 08, 2024


# “அன்று புலி, இன்று எலி!”

**சுப.வீரபாண்டியன்**

தேர்தலுக்கு முன்னால் வீராவேசமாகப் பேசிய சிலர், தேர்தல் தோல்விகளால் துவண்டும் சுருண்டும் போனபின், அப்படியே பேச்சை மாற்றி இருக்கிறார்கள். குறிப்பாக, தேர்தல் முடிந்த பிறகு வெளிவந்துள்ள மூவரின் நேர்காணல்கள் நம்மைச் சிந்திக்க வைப்பதற்குப் பதிலாக, வெறுமனே சிரிக்க வைக்கின்றன.

முதல் நேர்காணல், பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலையினுடையது. தேர்தலுக்கு முன்பு அளித்த ஒரு நேர்காணலில் அவர் சொன்னார், "எல்லாரும் குறித்துக் கொள்ளுங்கள், வாக்குகள் எண்ணப்படும் போது, தமிழ்நாட்டின் தென்பகுதியில் இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும் ஓர் இடம் கூடக் கிடைக்காது".

யார் சூழ்ச்சி செய்தார்கள்? எதிர்க்கட்சியா, கூட்டணியில் இருந்த அதிமுகவா, அல்லது தேர்தல் ஆணையமா என்பதை அவர் விளக்கவில்லை. எனவே மறுவாக்கு எண்ணிக்கை நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறார். அப்படிக் கோருவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அவர் கோரிக்கையை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால், மறு எண்ணிக்கை நடக்கும். நடக்கட்டும்.

ஆனால் அவர் வைக்கும் இன்னொரு கோரிக்கைதான் விந்தையாகவும், வியப்பாகவும் உள்ளது. "ஒரு சின்னப் பையன் கடைசி வரைக்கும் போராடி களத்துல நிக்கிறானே என்று நினைத்து ஆளும்கட்சி விட்டுக் கொடுத்திருந்தால், நான் தலைவணங்கி இருப்பேன்" என்கிறார். அவருடைய









இப்போது அதே அண்ணாமலை சொல்கிறார் - "நான் திராவிடக் கட்சிகள் என்று சொல்லலையே, அதிமுக என்றுதான் சொன்னேன். "உடனே ஊடகவியலாளர்கள் இரண்டு நேர்காணல்களையும் அடுத்தடுத்து எடுத்துப் போடுகிறார்கள். அண்ணாமலையைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது!

அடுத்தது, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவின் நேர்காணல்.

தங்கள் மகன் விஜய் பிரபாகரன் சூழ்ச்சியால் தோற்கடிக்கப்பட்டு விட்டார் என்று சொல்கிறார்.

கோரிக்கையையும் ஆதங்கத்தையும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து பாமகவின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட திரைப்பட இயக்குனர் தங்கர் பச்சானின் நேர்காணல்.

இயல்பாகவே அவர் கொஞ்சம் கோபக்காரர். இப்போது தோல்வியைத் தாங்க முடியாமல், அவர் முகத்தில் அனல் பறக்கிறது! மக்களைப்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

பார்த்து, போட்ட சின்னத்துக்கே ஓட்டுப் போட்டு எப்படியோ போங்க என்று அலுத்துக் கொள்கிறார். வெற்றி பெற்றுப் போனவர்களைப் பார்த்து, நாடாளுமன்றத்திற்குப் போய் என்ன செய்தீர்கள் என்று மக்கள் கேட்க வேண்டும் என்கிறார். மருத்துவர் அன்புமணியைப் பார்த்து அப்படி ஒரு கேள்வியை மக்கள் கேட்கவே முடியாது. அவர்தான் நாடாளு மன்றத்திற்கே போவதில்லையே!

திமுக தலைவர்கள் எல்லோரும் மன்னர்களைப் போல வாழ்கிறார்கள் என்று வேறு தங்கர்பச்சான் குறைப்பட்டுக் கொள்கிறார். ஆம், மருத்துவர் அய்யாவும், சின்ன அய்யாவும் ஏழைகளின் குடிசைகளில்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் மூவரையும் தூக்கி அடிக்கிற மாதிரி, தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு ஒரு பேட்டி அளித்திருக்கிறார். உலகிலேயே வலிமையான தலைவர் மோடிதான் என்கிறார்.

ஆமாம், வலிமையான தலைவரால் மட்டும்தானே, வெறும் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கும் தோழமைக் கட்சிக்கு, சபாநாயகர், இரண்டு கேபினட் அமைச்சர்கள், மூன்று இணை அமைச்சர்கள் எனப் பதவிகளை வாரி வழங்க முடியும்!

ஊடகவியலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! தேர்தலில் தோல்வி அடைந்த "பெரியவர்களிடம்" இன்னும் ஓராண்டுக்குப் பேட்டி எடுக்காமல் இருந்தால், மக்களுக்கு நல்லது செய்ததாக இருக்கும்! ●

# ராமரும் கை கொடுக்கவில்லையே!

## மதிவாணன்

நரேந்திர மோடி 2014 தேர்தலில், தான் 'மக்களின் சேவகன்' என்றும், 2019-இல் தான் 'காவலன்' என்றும், 2024 தேர்தல் பரப்புரையில் தான் 'கடவுளின் அவதாரம்' என்றும் பேசினார். தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, 'நான் தாயை இழந்து அனாதையாய் நிற்கிறேன்' என்று அனுதாபம் தேடுகிறார்.



கடந்த காலங்களில் பாஜகவிற்கு அறுதிப் பெரும்பான்மை இருந்ததால், இறையாண்மை பெற்ற அரசு எந்திரங்கள் மீது அக்கட்சி ஆதிக்கம் செலுத்தியதாகப் பரவலான குற்றச்சாட்டுகள் இருந்தன. நீதித்துறை, தேர்தல் ஆணையம், அமலாக்கத்துறை, வருமான வரித் துறை, சிபிஐ என அனைத்து அமைப்புகளும் பாஜகவின் கிளை அமைப்புகளா என்ற அய்யதிற்கு உள்ளாகும் வகையில் இருந்தன. இந்திய ஜனநாயகம் ஆபத்தில் இருப்பதை எதிர்க்கட்சிகள் மக்களிடம் கொண்டு சேர்த்திருந்தன. இந்தியா காப்பாற்றப்பட வேண்டும் என்றால், அதன் பன்மைத்துவம் பலிகொடுக்கப்படாமல் இருக்க வேண்டும் என்றால், பாஜகவிற்கு எதிராக வாக்களிக்க வேண்டியதை மக்கள் உணரத் தொடங்கினர்.

இரண்டாவது, இந்த வாக்குச் சரிவிற்கு மக்களின் அடிப்படை சிக்கல்கள், பொருளாதார சரிவு முக்கிய பங்காற்றின. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காதது, விவசாயிகள் போராட்டம், பெட்ரோல், டீசல்,எரிவாயு உள்ளிட்ட அடிப்படை பொருட்களின் விலையுயர்வு போன்றவை மக்களைப் பெரிதும் பாதித்தன.

பாஜக அரசின் சமூக நீதிக்கு எதிராக, மக்களின் உரிமைகளை முடக்கும் அடிப்படையிலான மசோதாக்கள் பல்வேறு சமூகக் குழுக்களின் எதிர்ப்பைப் பெற்றன. சிறுபான்மையினருக்கு எதிராக மக்களைப் பிரித்தாளும் முறை மக்களிடம் எடுபடவில்லை. பெண்கள் அவமதிப்புக்கு உள்ளாவது, சிறுபான்மையினர் தாக்கப்படுதல், பட்டியலினத்தவர்களை இழிவுபடுத்தும் செயல்பாடுகள், கூட்டு வன்முறைகள் தலைவிரித்தாடின.

இறுதிக்கட்டத் தோல்வி பயத்தில் இஸ்லாமியருக்கும், தமிழர்களுக்கும் எதிராக மோடி பேசிய பேச்சுகள் இதுவரை இந்தியப் பிரதமர்கள் யாரும் பேசாத இழிவான பேச்சாகும்.

மூன்றாவது, இத்தேர்தலில் வலுவான கூட்டணிக் கட்சிகளின் துணையில்லாமல் பாஜக தள்ளாடியது. இதனால் அக்கட்சி பல இடங்களில் தனித்தே விடப்பட்டது. கூட்டணிக் கட்சிகளை பலவீனப்படுத்தி, தங்களை வலுப்படுத்திக் கொள்வது என்ற சுயநல ஆதிக்கச் சிந்தனைதான் இதற்குக் காரணம்.

மேலும் பாஜகவின் பழமைவாதமும், வெறுப்பு அரசியலும், அறிவியலுக்கு முற்றிலுமாக எதிரான சிந்தனை யோட்டமும் புதிய படித்த வாக்காளர்களிடம் இருந்து அக்கட்சியை அந்நியப்படுத்தி இருக்கிறது.

தேர்தலுக்குப் பிறகு ஒரு கூட்டத்தில் பேசிய மோடி ஜெய் ஸ்ரீராம் என்று கோசமிடும் வழக்கத்தை மாற்றி, 'ஜெய் ஜெகநாத்' என்று கோசமிட்ட போது, அவரின் தொண்டர்கள் பரிதாபமாக "ராமருக்கு என்ன ஆனது" என்று கேட்கும் அளவிற்கு இத்தேர்தல் முடிவுகள் வந்துள்ளன.

பாவம்! ராமரும் காப்பாற்றவில்லை மோடியை! ●

# திராவிடப்பள்ளி

## முன்னாள் மற்றும் இந்நாள் மாணவர்கள் சந்திப்பு

நாள்: 02.06.2024 – ஞாயிற்றுக்கிழமை,
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம்: வாணி மஹால், புதிய பேருந்து நிலையம் எதிரில், அரியலூர்.


சுப.வீரபாண்டியன்


பொள்ளாச்சி மா.உமாபதி


அமைச்சர் சிவசங்கர்


எட்வின்


மதிவதனி


கார்த்தி


சூரியா கிருஷ்ணமூர்த்தி


வெற்றிச்செல்வன்


மாணவர்கள்

அரியலூரில் 02-06-2024 அன்று ‘திராவிடப் பள்ளி’ மாணவர்களின் நேரடி சந்திப்பு நடைபெற்றது. தோழர் பொள்ளாச்சி மா.உமாபதி தலைமையில், தோழர் எட்வின் அனைவரையும் வரவேற்றார். காலை முதல் அமர்வில் திராவிடர் கழகத் துணைப்பொதுச் செயலாளர் மதிவதனி, திமுக செய்தித் தொடர்பாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் திராவிடம் குறித்தகருத்துகளை எடுத்துரைத்தனர். மாலை அமர்வில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் பேச்சரங்கம் குறித்து விளக்கிப் பேசினார். இந்நிகழ்வில் மாண்புமிகு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புச் செய்தார். திராவிடப்பள்ளி துணை ஒருங்கிணைப்பாளர்கள் தோழர்கள் கார்த்தி, வெற்றிச்செல்வன், லோகபாலன், மதிவாணன் ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஞாயிறு போற்றுதும்!

புரட்சி (மக்களின் கோபம்) எரிமலை போன்றது. நிலத்திற்கு அடியில் குமுறிக் குமுறி காலம் எடுத்துத்தான் அது வெடிக்கும் என்கிறார் ஜவகர்லால் நேரு.

பத்தாண்டு காலம் குமுறிக் கொதித்திருந்த இந்திய ஒன்றிய மக்களின் கோபம் 04-06-2024 அன்று வெடித்துச் சிதறியது, தேர்தல் முடிவுகளாக.

இந்தியா கூட்டணியின்‘கோடு உயர்ந்தது’. காவிகளின் ‘குன்றம் தாழ்ந்தது’.

எந்த வடிவத்தில் இருந்தாலும் சர்வாதிகாரத்திற்கும், அடிமைச் சமூகத்திற்குமான சமரசமற்ற போரால்தான் ஜனநாயத்தை மீட்டெடுக்க முடியும் என்ற மையப்புள்ளியை ரூசோவின்‘சமுதாய ஒப்பந்தத்‘தில் பார்க்க முடிகிறது.

அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் இருந்த மோடி, தன்நிலை மறந்தும், தனித்த ஆணவத்துடன் பேசியும், செயல்பட்ட மோடியை, இன்று சந்திரபாபு நாயுடுவிடம் கையேந்த வைத்தனர் மக்கள்.

சர்வாதிகாரத்திற்கு எதிராக மக்கள் நடத்திய இத்தேர்தல் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் போராகவே அமைந்து விட்டது.

வென்றனர் மக்கள்! வீழ்ந்தனர் காவிகள்!

ஆயுதப் போர் நடத்தி மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது பிரஞ்சுப் புரட்சி!

அறிவுப் புரட்சியால்‘மன்னர்’ மோடியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது ஒன்றியத்

தேர்தல் புரட்சி!

ஒன்றியம் எல்லாம் ஒலிக்க வேண்டும்,

" ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## கலைஞருக்கு மரியாதை



திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைமை அலுவலகத்தில் 03-06-2024 அன்று காலை 11 மணி அளவில், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 101 ஆம் பிறந்த நாளை முன்னிட்டு அவரின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. தோழர்கள் முத்தையா குமரன், எட்வின், ‘பெல்’ராஜன், செல்வின் சௌந்தரராஜன், லோகபாலன், நெல்லை பாபு, வெற்றிச்செல்வன், மனோகரன், அசோக் உள்ளிட்டோர் தலைவர் கலைஞர் குறித்த புகழுரைகளை மற்றும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.